# முன்னுரை

**பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்**



புதிய பாடத்திட்டத்தின் கீழ் 2017ஆம் ஆண்டில் தரம் - 02 இல் காலடி எடுத்து வைக்கும் மாணவர்களுக்கான ‘‘சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள்’’ எனும் நூலை வெளியிடுவதில் நான் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன்.

கல்வியுலகு முன்னேறிக் கொண்டிருக்கும் இக்காலப்பகுதியில் புதிய கல்விக் கொள்கைகளும், கல்விச் சீர்திருத்தங்களும் வெளிவந்த வண்ணமே இருக்கிறது. இதனை அடிப்படையாகக் கொண்டே தரம் - 01 இலிருந்து புதிய கல்வித் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. அவ்வடிப்படையில் இவ்வருடமும் தரம் - 02ற்கு புதிய கல்வித்திட்டத்தின் கீழ் அவர்களது ‘‘சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகளும்’’ அமைந்துள்ளது.

இதற்கான ஆசிரியர் கைந்நூல் தாமதாகவே வெளியிட்ட போதும் மாணவர்களுக்கான மேலதிக பயிற்சிகள் எதுவும் இல்லாது பழைய நூல்களையே படிக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. இதனை நிவர்த்தி செய்யும் முகமாகவே மாணவர்களுக்கு ஆசிரியர் கைந்நூலை தழுவி அதில் குறிப்பிடப்பட்டுள்ள கணிப்பீடுகளின் அடிப்படையில் பல குறிப்புக்கள் படங்களோடு அமைந்துள்ளது. அதற்கான பயிற்சிகளையும் இந்நூல் கொண்டுள்ளது.

மேலும் இந்நூல் சகல மாணவர்களுக்கும் பயன் கொடுக்கும் எனவும், ஆசிரியர்களின் வேலைச்சுமையை குறைப்பதோடு மாணவர்கள் வீட்டிலிருந்த படியே இலகுவாக கற்கவும் இந்நூல் பெரிதும் உதவும் எனவும் எதிர்பார்க்கின்றேன்.

***எம்.எச்.எம்.ஸஜீர்***

**நூலாசிரியர்**

# உள்ளடக்கம்


| | | |
|---|---|---|
| 01) | நாமும் பாடசாலையும் | 03 - 12 |
| 02) | எமது வீடு | 13 - 20 |
| 03) | தோட்டத்திற்கு வரும் பிராணிகள் | 21 - 36 |
| 04) | நீருடன் விளையாட்டு | 37 - 49 |
| 05) | புத்தாண்டுக் காலம் | 50 - 58 |

# அலகு - 01

# நாமும் பாடசாலையும்








## 01) பாடசாலையிலுள்ள முக்கியமான இடங்கள்




வகுப்பறை





அதிபர் அறை




விளையாட்டு மைதானம்



நூலகம்



சிற்றுண்டிச்சாலை



கணினி அறை

## 02) பாடசாலையில் ஒழுங்கின்றிக் காணப்படும் இடங்களை ஒழுங்காகவும், சுத்தமாகவும், அழகாகவும் மாற்றும் விதங்கள்.



- ❖ கூட்டித் துப்பரவு செய்தல்.
- ❖ களைப்பூண்டுகளை பிடுங்குதல்.
- ❖ பூம்பாத்திகளை அமைத்தல்.
- ❖ அமைத்த பூம்பாத்திகளை நன்கு பராமரித்து காட்சிப்படுத்தல்.
- ❖ வகுப்பில் படங்கள் தொங்கவிடல்.
- ❖ தேவையான இடங்களில் நிறப்பூச்சு பூசுதல்.
- ❖ உடைந்த, சிதைந்த இடங்களை சரிபடுத்துதல்.
- ❖ சிலந்திவலைகளை துடைத்தல்.
- ❖ மிதிக்கும் இடங்களிலுள்ள கல், வேர், முள் போன்றவற்றை அகற்றுதல்.


## 03) மேலுள்ள செயற்பாடுகளை செய்வதனால் கிடைக்கும் நன்மைகள்.

- ❖ கற்றலுக்குப் பொருத்தமான சூழல் உருவாகும்.
- ❖ ஆரோக்கியத்தை தொடர்ந்தும் பேணி வரலாம்.
- ❖ கவர்ச்சிகரமான பாடசாலைச் சூழல் உருவாகும்.
- ❖ அன்றாட வேலைகளை இலகுவாகவும் மகிழ்ச்சியாகவும் நிறைவேற்றலாம்.
- ❖ கற்றல்-கற்பித்தல் சீராக நடைபெறும்.
- ❖ மாணவர்கள் விருப்புடன் கல்வி கற்க வாய்ப்பு உருவாகும்.
- ❖ எல்லோரதும் நன்மதிப்பைப் பெறலாம்.


**04) தொடர்ந்தும் பாடசாலையின் நேர்த்தியைப் பேண செய்ய வேண்டிவை பற்றி அறிந்து கொள்வோம்.**

- ஒழுங்காகவும், நேர்த்தியாகவும் தமது வேலைகளை செய்தல்.
- எடுத்த பொருட்களை பயன்படுத்திய பின் மீண்டும் அதே இடத்தில் வைத்தல்.
- தாம் வேலை செய்த இடத்தை சுத்தப்படுத்தல்.
- குப்பை கூழங்களை உரிவாறு அப்புறப்படுத்தி குப்பைத் தொட்டியினுள் இடுதல்.
- பூம்பாத்திகளுக்கு தினமும் நீர் ஊற்றுதல்.
- சூழலிலுள்ள குப்பைகளை தினமும் கூட்டி பெருக்கி எரித்தல் அல்லது புதைத்தல்.

## 05) பாடசாலையில் நாம் பயன்படுத்தும் இடங்களும் பொருட்களும், அவற்றின் பயன்படுகளும்.



கதிரையும் மேசையும்
இருந்து எழுத, படிக்க உதவும்.



கரும்பலகை
ஆசிரியர் எழுத உதவும்.



புத்தகங்கள்
வாசிக்க உதவும்.



நீர்க்குழாய்
நீர் அருந்துவதற்கு பயன்படும்.

## 06) மேலே கூறப்பட்ட இடங்கள், பொருட்கள் ஒழுங்கற்றுக் காணப்படுவதற்கான காரணங்கள்.

- ❖ ஒழுங்கின்றியும் நேர்த்தியின்றியும் புத்தகங்களை பயன்படுத்துதல்.
- ❖ மேசை கதிரைகளை இடத்துக்கிடம் கொண்டு செல்வதற்காக இழுத்துச் செல்லல்.
- ❖ கதிரைகளின் இரண்டு கால்களில் மட்டும் அமர்ந்து ஆட்டி அசைத்தல்.
- ❖ நீர் ஒழுக்கு நிகழும் வகையில் நீர்க்குழாய்களை சரியாக மூடாது வைத்தல்.
- ❖ தேவையற்ற கிறுக்கல்கள் மூலம் சுவரின் அழகைக் கெடுத்தல்.
- ❖ இரும்பு வலைகளில் உரிய காலங்களில் பூச்சுப் பூசாததினால் அவை துருப்பிடித்தலுக்கு உள்ளாதல்.
- ❖ சேதமுற்ற சுவர்ப்பகுதிகளை திருத்தாமையினால் அவை மேலும் உடைதல்.

## 07) பாடசாலையின் இடங்களையும் பொருட்களையும் பாதுகாக்க வேண்டியதன் அவசியம்.

- ❖ பாடசாலையும் வகுப்பறையும் பொதுப்பயன்பாட்டிற்குரிய இடங்களாகும் அவற்றை நாம் சேதப்படுத்தவோ அசிங்கப்படுத்தவோ கூடாது.
- ❖ அவற்றை நேர்த்தியாகவும் ஒழுங்காகவும் பயன்படுத்த வேண்டும்.
- ❖ அவ்வாறு நாம் பாதுகாப்பதால் எதிர்காலத்தில் எமது சகோதர சகோதரிகளுக்கும் இவற்றை முறையாகப் பயன்படுத்த சந்தர்ப்பம் கிடைக்கும்.
- ❖ இதனால் மேலும் பெருந்தொகையான மாணர்களுக்கு சேவையும் பயனும் கிடைக்கின்றது.
- ❖ அரசினால் இலசமாக வழங்கப்படும் இவற்றை சேதப்படுத்த எந்த ஒரு மாணவனுக்கும் உரிமை கிடையாது.
- ❖ இவற்றை பாதுகாப்பது ஒவ்வொரு மாணவனதும் கடமையாகும்.

## 08) பாடசாலையினால் நமக்குக் கிடைக்கும் சேவைகள்.

- ❖ நற்பழக்கங்களை கற்பித்தல்.
- ❖ சிறந்த கல்வியை வழங்குதல்.
- ❖ ஆராக்கிய வாழ்க்கைக்கு தேவையான நற்பழக்கங்களை வழங்குதல்.
- ❖ திறமைகளை வெளிக்காட்ட சந்தர்ப்பம் கிடைத்தல்.
- ❖ நண்பர்களுடன் பழக சந்தர்ப்பம் கிடைத்தல்.

## 09) நாம் பாடசாலைக்கு ஆற்ற வேண்டிய சேவைகள்.

- ❖ கற்றல் வேலைகளை நன்றாகச் செய்தல்.
- ❖ நற்குணங்களுடன் நடந்து கொள்ளல்.
- ❖ நமது பாடசாலைக்கு மதிப்பளித்து செயற்படல்.
- ❖ பாடசாலையின் நற்பெயரை உயர்த்தும் வகையில் செயற்படல்.
- ❖ ஆசியர்களுடன் பணிவாகவும் மரியாதையாகவும் நடத்தல்.
- ❖ பாடசாலையில் உள்ள வளங்களை பாதுகாத்தல்.
- ❖ பாடசாலையிலுள்ள கதிரை, மேசைகளை உடைக்காது பாதுகாத்தல்.
- ❖ பாடசாலையை அழகாக வைத்திருக்க உதவுதல்.

❖ மேலுள்ள செயற்பாடுகளை செய்யும் ஒரு பிள்ளையே சிறந்த மாணவனாக திகழ்வதோடு சமூகத்தின் நன்மதிப்புக்கும் உள்ளாவான்.

## 10) பாடசாலையில் எமக்கு உதவும் நபர்கள்.

| நபர்கள் | சேவைகள் |
|---|---|
| **அதிபர்**   | ❖ பாடசாலையை நிர்வாகம் செய்தல்.<br>❖ பாடசாலையின் கல்வி செயற்பாட்டிற்கு உதவுதல்.<br>❖ பாடசாலைக்கு தேவையானவற்றை ஒழுங்குபடுத்தி கொடுத்தல். |
| **உதவி அதிபர்**  | ❖ அதிபரின் வேலைகளுக்கு உதவுதல்.<br>❖ பாடசாலையின் கல்வி செயற்பாடுகளை கண்கானித்தல்.<br>❖ நேரசூசி தயாரித்து வழங்குதல். |
| **ஆசிரியர்கள்**  | ❖ மாணர்களுக்கு பாடம் கற்பித்தல்.<br>❖ அவர்களின் நலனில் அக்கரை செலுத்துதல்.<br>❖ மாணவர்களுக்கு தேவையான உதவிகளை வழங்குதல். |

| | |
|---|---|
| **அலுலக உதவியாளர்**  | ❖ அலுவலகத்தை திறத்தல். ❖ உரிய வேளையில் மணி அடித்தல் ❖ தேவையானற்றை ஆயத்தம் செய்தல். |
| **காவலாளி**  | ❖ பாடசாலை நுழைவாயலை திறத்தல்,மூடுதல். ❖ பாடசாலையையும் அங்குள்ள வளங்களையும் பாதுகாத்தல். ❖ பாடசாலை மாணவர்களுக்கு உதவுதல். |
| **சுத்திகரிப்போர்**  | ❖ பாடசாலை வளங்களை பாதுகாத்தல். ❖ பாடசாலையை சுத்தமாக வைத்திருக்க உதவுதல். ❖ பாடசாலையை பாதுகாத்தல். ❖ மாணவர்களுக்கு உதவுதல். |

## இச்செயற்பாடுகளை சிறப்பாகச் செய்வதால் ஏற்படும் நன்மைகள்.

❖ பாடசாலையின் கருமங்கள் இலகுவாகும்.

❖ பாடசாலையின் முன்னேற்றத்திற்கு உதவும்.

❖ நட்புடனும், கருணையுடனும் செயலாற்ற வழிவகுக்கும்.

❖ சிறந்த முறையில் கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்.

❖ சிறந்த பாடசாலை என்ற நன்மதிப்பைப் பெறலாம்.

❖ பாடசாலை ஒரு மகிழ்ச்சிகரமான இடமாக அமையும்

## 11) வருடத்திலுள்ள மாதங்களும் அவற்றில் அடங்கியுள்ள விசேட தினங்களும்.

| மாதம் | விசேட தினம் | இடம்பெறும் திகதி |
|---|---|---|
| ஜனவரி | பௌர்ணமி தினம் | 12 |
| | தைப்பொங்கல் | 14 |
| பெப்ரவரி | சுதந்திர தினம் | 04 |
| | பௌர்ணமி தினம் | 10 |
| | சிராத்திரி தினம் | 24 |
| மார்ச் | பௌர்ணமி தினம் | 12 |
| ஏப்ரல் | பௌர்ணமி தினம் | 10 |
| | சித்திரைப் புத்தாண்டு | 14 |
| மே | தொழிலாளர் தினம் | 01 |
| | வெசாக் | 10 |
| ஜூன் | பொசன் | 08 |
| | நோன்புப் பெருநாள் | 26 |
| ஜூலை | பௌர்ணமி தினம் | 08 |
| ஆகஸ்ட் | பௌர்ணமி தினம் | 07 |
| செப்டம்பர் | ஹஜ்ஜுப் பெருநாள் | 01 |
| | பௌர்ணமி தினம் | 05 |
| ஒக்டோபர் | பௌர்ணமி தினம் | 05 |
| | தீபாவளி | 18 |
| நவம்பர் | பௌர்ணமி தினம் | 03 |
| டிசம்பர் | மீலாதுன் நபி விழா | 01 |
| | பௌர்ணமி தினம் | 03 |
| | கிறிஸ்மஸ் | 25 |

## 12) பின்வரும் வாசகங்களை வகுப்பில் காட்சிப்படுத்துவோம்.

வகுப்பை சுத்தமாக வைத்திருப்போம்.

புத்தகங்களை ஒழுங்காக வைத்திருப்போம்.

வகுப்பில் அமைதியைப் பேணுவோம்.

ஆசிரியர் சொற்படி நடப்போம்.

மேசை, கதிரைகளை உடைக்காமல் பாதுகாப்போம்.



- ❖ படத்திலுள்ளவாறு பிரம்புத்தண்டு, பீவீசி (PVC) குழாய் போன்றவற்றை பயப்படுத்தி வளையமாக்கி மாணவரை பிடித்து நிற்குமாறு கூறுக.
- ❖ மாணவர்கள் வரிசையில் நின்று ஆசிரியரின் கமிக்ஞையின் படி ஒருவர் பின் ஒருவராக நுழைந்து சென்று வியைாடி மகிழ்க.

## பயிற்சி

### 01) சரியான விடையின் கீழ் கோடிடுக.

01.வகுப்பை அழகாக வைக்க செய்ய வேண்டியது,
1. குப்பைகளை இருந்தவாறே விடல்
2. படங்களை தொங்கவிடல்
3. மண்ணை போடுதல்

02.பாடசாலையில் பயன்படும் உபகரணங்களில் ஒன்று அல்லாதது,
1. கதிரை 2. குப்பைக்கூடை 3. கட்டில்


03.பாடசாலையை நிர்வகிக்கும் ஒருவர்
1. அதிபர் 2. காவலாளி 3. சுத்திகரிப்பாளர்

04.பாடசாலையினால் நமக்கு கிடைக்கும் நன்மை
1. உபகரணங்கள் கிடைத்தல்
2. சிறந்த கல்வி வழங்குதல்
3. வீட்டுக்கு உதவியாக இருத்தல்

05.பாடசாலைக்கு நாம் ஆற்றவேண்டிய கடமை அல்லாதது,
1. நற்குணங்களுடன் நடந்து கொள்ளல்
2. ஆசிரியர்களை மதித்து நடத்தல்
3. பாடசாலையில் குப்பைகளை போடுதல்.

06.ஜனவரி மாதம் இடம்பெறும் முக்கிய தினங்களில் ஒன்று
1. வெசாக் 2. தைப்பொங்கல் 3. ஹஜ்ஜுப் பெருநாள்

### 02) பின்வருவோருடன் பொருத்தமான பணிகளை தொடர்புபடுத்துக.

01.  பாடசாலையை நிர்வகித்தல்.

02.  பாடசாலையை பாதுகாத்தல்.

03.  மாணவர்களுக்கு பாடம் கற்பித்தல்

04.  பாடசாலையை சுத்தமாக வைத்திருத்தல்.

## 03) சரியாயின் (✓) எனவும் பிழையாயின் பிழை (✗)எனவும் அடையாளமிடுக.

01. பாடசாலையை தினமும் கூட்டித் துப்பரவு செய்ய வேண்டும். (     )
02. நீர் குழாய்களை சரியாக மூடக் கூடாது. (     )
03. நாம் ஆசிரியர்களிடம் பணிவாக நடந்து கொள்ள வேண்டும். (     )
04. பாடசபலை எமக்கு நற்பழக்கங்களை கற்றுத் தருகிறது. (     )
05. பாடசாலையை சுத்தமாக்க சுத்திகரிப்பாளர்கள் தேவையில்லை. (     )

## 04) சரியான விடை எழுதுவோம்.

01. பாடசாலையில் காணப்படும் முக்கியமான இடங்கள் இரண்டின் பெயரைக் குறிப்பிடுக?

    ……………………………… ……………………………………

02. எமது வகுப்பை அழகாக வைத்திருக்க நாம் செய்யக்கூடியவை இரண்டு தருக?

    ……………………………………………………………………………

    ……………………………………………………………………………

03. மாணவராகிய நீங்கள் பாடசாலைக்கு செய்யக்கூடிய விடயங்கள் இரண்டு தருக?

    ……………………………………………………………………………

    ……………………………………………………………………………

04. பாடசாலையில் உமது கற்றலுக்கு உதவும் நபர்கள் இருவரின் பெயரைத் தருக?

    ……………………………… ……………………………………

05. பின்வரும் விசேட தினங்கள் வரும் மாதங்களைக் குறிப்பிடுக.

    1. வெசாக் ……………………………..
    2. சித்திரைப் புத்தாண்டு ……………………………..
    3. தைப்பொங்கல் ……………………………..
    4. நோன்புப் பெருநாள் ……………………………..
    5. கிறிஸ்மஸ் ……………………………..

# அலகு - 02
# எமது வீடு

## 01) எமது குடும்பத்திலுள்ள உறவினர்கள்.


அம்மா



அப்பா


அண்ணா


அக்கா


தம்பி


தங்கை


தாத்தா


பாட்டி

## 02) உறவு முறைகளை அழைக்கும் விதங்கள்.

- ❖ எனது தந்தையின் தந்தை - பாட்டன் / அப்பப்பா
- ❖ எனது தந்தையின் தாய் - பாட்டி / அப்பம்மா
- ❖ எனது தாயின் தந்தை - பாட்டன் / அம்மப்பா
- ❖ எனது தாயின் தாய் - பாட்டி / அம்மம்மா
- ❖ எனது தந்தையின் சகோதரி - மாமி
- ❖ எனது தந்தையின் மூத்த சகோதரன் - பெரியப்பா
- ❖ எனது தந்தையின் இளைய சகோதரன் - சித்தப்பா
- ❖ எனது தாயின் மூத்த சகோதரி - பெரியம்மா
- ❖ எனது தாயின் இளைய சகோதரி - சித்தி / சின்னம்மா
- ❖ தாயின் சகோதரர்கள் - மாமா

## உறவு முறைகளை மக்கட் பிரிவினர் அழைக்கும் விதங்கள்.

| உறவினர்கள் | தமிழர்கள் | முஸ்லிம்கள் |
|---|---|---|
| அம்மாவின் அப்பா | பாட்டன் | மூத்தப்பா |
| அம்மாவின் அம்மா | பாட்டி | மூத்தம்மா |
| அப்பாவின் அப்பா | பாட்டன் | வாப்பப்பா |
| அப்பாவின் அம்மா | பாட்டி | வாப்பம்மா |
| அக்காவின் தங்கை | மாமி | மாமி |
| அப்பாவின் அக்கா | மாமி | மாமி |
| அப்பாவின் அண்ணா | பெரியப்பா | சாச்சா |
| அம்மாவின் அக்கா | பெரியம்மா | பெரியம்மா |
| அம்மாவின் தம்பி | மாமா | மாமா |
| அம்மாவின் தங்கை | சித்தி / சின்னம்மா | சாச்சி |

## 03) நல்ல குடும்பமொன்றில் காணப்பட வேண்டிய தன்மைகள்

- ❖ குடும்ப உறுப்பினர்கள் அனைவருடனும் ஒற்றுமையாகச் செயற்படல்.
- ❖ கிடைப்பவற்றை அனைவரும் பகிர்ந்து அளித்தல்.
- ❖ நட்புடன் விழித்து உரையாடல்.
- ❖ எல்லா உறவினர்களும் பிணைந்து காணப்படுவர்.
- ❖ பாதுகாப்பாக இருத்தல்.
- ❖ ஒருவருக்கொருவர் உதவியாக இருத்தல்.
- ❖ அனைவரும் கூட்டுப் பொறுப்புடன் செயற்படல்.
- ❖ மகிழ்ச்சி, துக்கம் போன்றவற்றில் பங்கெடுத்துக் கொள்ளல்.


## 04) நல்ல குடும்ப இயல்புகளை பேணி வருவதால் கிடைக்கும் நன்மைகள்

- ❖ வீடு மகிழ்ச்சிகரமான ஒரு இடமாக அமையும்.
- ❖ மக்களுக்கு ஓர் எடுத்துக்காட்டாக இருக்கும்.
- ❖ சமூகத்தில் நல்ல குடும்பங்கள் பல உருவாக வழிவகுக்கும்.
- ❖ சமூகத்தில் அக்குடும்பம் தொடர்பாக நல்ல மனப்பாங்கு உருவாகும்.
- ❖ அமைதியான சூழலும் நல்வாழ்வும் கிடைக்க வழிவகுக்கும்.

## 05) குடும்பத்தின் நல்ல இருப்புக்காக அதன் உறுப்பினர்கள் செய்ய வேண்டியவை.






❖ வீட்டில் உள்ள உறவினர்கள் அனைவரும் வீட்டில் தினமும் பல்வேறு வேலைகளை பகிர்ந்து செய்கின்றனர். அவற்றுள் சில வருமாறு,

### வீட்டில் அம்மா செய்யும் வேலைகள்

- உணவு சமைத்தல்.
- பாத்திரம் கழுவுதல்.
- தேநீர் தயாரித்தல்
- வீடு பெருக்குதல்.
- தேங்காய் துருவுதல்.
- முற்றம் கூட்டுதல்.
- துணி துவைத்தல்.

### வீட்டில் அப்பா செய்யும் வேலைகள்

- விறகு வெட்டுதல்.
- பணம் சம்பாதித்தல்.
- சந்தைக்குச் செல்லுதல்.
- நீர்த்தாங்கியை சுத்தம் செய்தல்.
- வேலி அமைத்தல்.
- வீட்டுத்தோட்டம் செய்தல்.

## வீட்டில் அண்ணா செய்யும் வேலைகள்

- தோட்டத்திற்கு நீர் ஊற்றுதல்.
- கடைக்குச் செல்லுதல்.
- சந்தைக்குச் செல்லுதல்.
- அப்பாவின் வேலைகளில் பங்கெடுத்து உதவி செய்தல்.

## வீட்டில் அக்கா செய்யும் வேலைகள்.

- பூந்தோட்டம் அமைத்தல்.
- வீட்டை கூட்டி பெருக்குதல்.
- தேங்காய் துருவுதல்.
- பாத்திரம் கழுவுதல்.
- சமையல் வேலைகளில் அம்மாவுக்கு உதவுதல்.

## வீட்டில் நீங்கள் செய்யும் வேலைகளை எழுதுங்கள்.

- ......................................................................
- ......................................................................
- ......................................................................
- ......................................................................
- ......................................................................

❖ இவ்வேலைகளை குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் கூட்டாக செய்வதன் மூலம் நல்ல குடும்பத்தை கட்டியெழுப்ப முடியும்.

## வீட்டையும் வீட்டுச் சூழலையும் சுத்தமாக வைக்கும் வழிமுறைகள்.

- தினமும் வீட்டை பெருக்குதல்.
- அழுக்குகளை கழுவி விடல்.
- குப்பைகளை குப்பைக் கூடையில் போடுதல்.
- தூசு, ஒட்டடைகளை தட்டி விடல்.
- பொருட்களை உரிய இடங்களில் அடுக்கி வைத்தல்.
- முற்றத்தை தினமும் பெருக்கி சுத்தம் செய்தல்.
- சூரிய ஒளி படுமாறு ஜன்னல்களை திறந்து வைத்தல்.

## வீட்டுச் சூழலின் அழகைப் பேணும் முறைகள்.

- குப்பை கூளங்கள் இல்லாது வைத்திருத்தல்.
- குப்பை கூளங்களை எரித்து கழிவுகளை புதைத்தல்.
- முற்றத்தில் பூந்தோட்டம் அமைத்தல்.
- மரக்கன்றுகளை நடல்.
- தோட்டத்திற்கு அழகாக பாத்தி அமைத்து வேலி அமைத்தல்.

## வீட்டை பாதுகாக்க செய்ய வேண்டியவை.

- மதில் அமைத்தல்.
- வேலி அமைத்தல்.
- வீட்டிற்கு உறுதியான கதவு போடுதல்.
- கதவுகளை பூட்டி வைத்தல்.
- காவலாளிகளை நியமித்தல்.
- வீட்டினுள் சூரிய ஒளியும் காற்றும் கிடைக்கக் கூடியவாறு கதவு, ஜன்னல்கள் அமைத்தல்.


## 06) வீட்டின் சுத்தத்தை பேணும் தூசு துடைப்பான் ஒன்றை ஆக்குவோம்.

### தேவையான பொருட்கள் :-


- 30 சென்றி மீற்றர் நீளமான 20 சென்றிமீற்றர் அகலமான துணித்துண்டு (சற்றுப்புதியது)
- 30 சென்றிமீற்றர் நீளமான தும்புத்தடி போன்ற அமைப்புடைய தடித்துண்டு
- “கோட் (Cord) நூல் - 2 மீற்றர் நீளமான துண்டு

### செய்முறை :-

- துணித்துண்டின் 5 சென்றிமீற்றர் அளவுள்ள பகுதி எஞ்சியிருக்குமாறு ஒரு சென்றி மீற்றர் அளவுள்ள கீற்றுக்களாக (படத்தி காட்டியவாறு) வெட்டிக் கொள்க.



உரு. 01



உரு. 02

- கீற்றுக்களாக வெட்டாத பகுதியில் நன்றாக பசை பூசிக் கொள்க.
- பின்னர் தடியின் ஓர் முனையில் துடித்துண்டை இறுக்கமாக ஒட்டிக் கொள்க.



உரு. 03

- பின்னர் கோட் நூலை எடுத்து பைன்டர் பசை பூசி, நூல் சுற்றுக்கள் நெருக்கமாக அமையுமாறு சுற்றிக்கட்டி அழகிய தூசு துடைப்பானை ஆக்கிக் கொள்க.

# பயிற்சி

## 01) சரியான விடையின் கீழ் கோடிடுக.

01. எனது தந்தையின் தந்தை எனக்கு யார்?
    1. பேரன் 2. பேர்த்தி 3. பாட்டன்

02. எனது அப்பாவின் தந்தை என்னை எவ்வாறு அழைப்பார்?
    1. மகன் 2. பேரன் 3. சகோதரன்

03. எனது தங்கை, அம்மாவின் தாயை எவ்வாறு அழைப்பாள்
    1. சித்தி 2. பாட்டி 3. பெரியம்மா

04. எனது தாயின் தந்தை எனக்கு யார்?
    1. அப்பா 2. தாத்தா 3. பேரன்

05. எமது குடும்ப உறுப்பினர் யார்?
    1. அக்கா 2. மாமா 3. சித்தி

06. வீட்டில் சேரும் கழிவுகளை இடவேண்டிய இடம்
    1. குப்பைத்தொட்டி 2. வீட்டு முற்றம் 3. தரிசு நிலம்

07. வீட்டினுள் போதியளவு காற்றோட்டம் கிடைக்க அமைப்பது
    1. சுற்று மதில் 2. யன்னல் 3. சுவர்

## 05) சரியாயின் (✓) எனவும் பிழையாயின் பிழை (✗)எனவும் அடையாளமிடுக.

01. அப்பாவின் சகோதரி மாமி ஆவார். ( )
02. அம்மாவின் மூத்த சகோதரி சித்தி ஆவார். ( )
03. எனது அம்மாவின் அண்ணா எனக்குப் பெரியப்பா ( )
04. எமது வீட்டு உறவினர்களுள் மாமியும் ஒருவராவார். ( )
05. வீட்டில் எல்லோரும் ஒற்றுமையாக செயற்பட வேண்டும். ( )

## 06) சரியான சொற்களைக் கொண்டு இடைவெளி நிரப்புக.
**(பேரன், உறவினர், சீயா, உதவியாக, யன்னல்)**

01. சிங்களவர்கள் அம்மாவின் அப்பாவை …………………… என அழைப்பார்கள்.
02. வீட்டிற்கு வெளிச்சமும் காற்றும் பெற …………………… உதவும்.
03. அப்பாவின் அம்மாவுக்கு நான் ………………… ஆகும்.
04. வீட்டில் ஒருவருக்கொருவர் ………………… இருத்தல் வேண்டும்.
05. வீட்டிற்கு அடிக்கடி ………………….. வந்து போவர்.

## 07) இணைக்குக.

| | |
|---|---|
| 01. அப்பாவின் அக்கா | பேரன் |
| 02. வீட்டில் அம்மா செய்யும் வேலை | குப்பைக்கூடை |
| 03. பாட்டிற்கு நான் | மாமி |
| 04. எனக்கு இளையவன் | பெரியப்பா |
| 05. எனது தகப்பனின் அண்ணா | சமைத்தல் |
| 06. குப்பை கூளங்களை போடுதல் | தம்பி |

## 08) சரியான விடை எழுதுங்கள்.

01. வீட்டிலுள்ள உறுப்பினர்கள் நான்குபேரின் பெயர் தருக?

………………………….. ………………………………

………………………….. ………………………………

02. வீட்டில் தாய் செய்யும் வேலைகள் 2 தருக?

……………………………… ………………………………

03. நீங்கள் வீடுகளில் செய்யும் வேலைகள் 2 தருக?

……………………………… ………………………………

04. வீட்டில் அக்கா செய்யும் வேலைகள் 2 தருக?

……………………………… ………………………………

05. நல்ல குடும்பமொன்றின் இயல்புகள் 2 தருக?

……………………………… ……………………………….


06. தூசு துடைப்பான் ஒன்றை ஆக்க தேவையான பொருட்கள் 2 தருக?

……………………………… ……………………………….

# அலகு - 03
# தோட்டத்திற்கு வரும் பிராணிகள்

❖ **சூழலில் காணப்படும் பிராணிகளை பின்வருமாறு வகைப்படுத்தலாம்.**

| விலங்குகள் | பறவைகள் | பூச்சிகள் | ஊர்வன |
|---|---|---|---|
| ஆடு | கோழி | எறும்பு | பாம்பு |
| மாடு | புறா | கரப்பான் | நத்தை |
| எருமை | காகம் | தேனீ | பல்லி |
| பூனை | குயில் | வண்ணத்துப்பூச்சி | ஓணான் |
| நாய் | கிளி | வெட்டுக்கிளி | அட்டை |
| முயல் | மைனா | தும்பி | தேள் |
| குரங்கு | கொக்கு | நுளம்பு | பூரான் |
| மான் | வாத்து | ஈசல் | முதலை |
| குதிரை | மயில் | முசுறு | நண்டு |
| கழுதை | கழுகு | கும்பிடு பூச்சி | ஆமை |
| யானை | மீன்னொத்தி | கறையான் | எறும்பு |
| ஒட்டகம் | வானம்பாடி | மூட்டைப்பூச்சி | மரவட்டை |


07. பின்வரும் பிராணிகளின் பெயர்களை எழுதுங்கள்.


# 01) பிராணிகளை அவற்றின் புறத்தோற்ற இயல்புகளை வைத்து வகைப்படுத்துவோம்.

**சூழலிலுள்ள பிராணிகளை அவதானித்து பின்வரும் அட்டவணையை பூர்த்தி செய்வோம்.**


| கண்ட பிராணி | கால்கள் எத்தனை | இறகு | | உரோமம் | | நிறம் |
|---|---|---|---|---|---|---|
| | | உண்டு | இல்லை | உண்டு | இல்லை | |
| நாய் | 4 | | × | × | | கபிலம் |
| எறும்பு | | | | | | |
| புறா | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |

## 01) பிராணிகளை அவற்றின் நிறத்தின் அடிப்படையில் வகைப்படுத்தல்

➢ **வெள்ளை நிறமான பிராணிகள்**




➢ **கறுப்பு நிறமான பிராணிகள்**



- **பச்சை நிறமான பிராணிகள்**




- **சிவப்பு நிறமான பிராணிகள்**

  எறும்பு, மரவட்டை, மான், செவ்வெறும்பு

- **பல நிறங்களில் காணப்படும் பிராணிகள்**

  நாய், முயல், குதிரை, கோழி, பூனை, புறா, வண்ணத்துப்பூச்சி

## 02) கால்களின் தொகைப்படி பிராணிகளை வகைப்படுத்தல்.

- **இரண்டு கால்கள் உள்ள பிராணிகள்**

  பொதுவாக பறவைகள் அனைத்திற்கும் இரண்டு கால்கள் உண்டு (உ – ம்)

  கோழி, காகம், புறா, மைனா, வாத்து, கிளி, கழுகு, குருவி, கொக்கு, பருந்து, குயில்

- **நான்கு கால்கள் உள்ள பிராணிகள்**


  பொதுவாக விலங்குகள் அனைத்திற்கும் நான்கு கால்கள் உண்டு (உ – ம்)

  ஆடு, மாடு, மான், எருமை, பூனை, குரங்கு, அணில், நாய், தவளை, யானை, முதலை, பல்லி, ஓணான், குதிரை, புலி

- **ஆறு கால்கள் உள்ள பிராணிகள்**

  பூச்சி இனம் அனைத்திற்கும் ஆறு கால்கள் காணப்படும்

  (உ – ம்



- **எட்டுக் கால்கள் உள்ள பிராணிகள்**
  சிலந்தி, தேள், உண்ணி, அழுக்கணவன்

- **பத்துக் கால்கள் உள்ள பிராணிகள்**
  இறால், நண்டு

- **அதிக கால்கள் உள்ள பிராணிகள்**
  பூராண், மரவட்டை

- **கால்கள் இல்லாத பிராணிகள்**
  பாம்பு, மண்புழு, நத்தை, அட்டை

**03) பிராணிகளை இறக்கை, உரோமத்தைக் கொண்டு வகைப்படுத்தல்.**

- **உடலில் உரோமம் கொண்டுள்ள பிராணிகள்**
  நாய், பூனை, மான், அணில், குரங்கு, ஆடு, செம்மறி ஆடு, முயல், குதிரை, கரடி, சிங்கம், புலி, நரி

- **இறக்கை கொண்டுள்ள பிராணிகள்**
  கோழி, காகம், கழுகு, மயில், குயில், வாத்து


**04) பருமனின் அடிப்படையில் பிராணிகளை வகைப்படுத்துவோம்.**


- **மிகப்பெரிய பிராணிகள்**
  யானை, ஒட்டகம், திமிங்கிலம், நீர் யானை, காண்டாமிருகம், குதிரை, சிங்கம், புலி, பசு, ஒட்டகச் சிவிங்கி

- **மிகச்சிறிய பிராணிகள்**
  முயல், பூனை, பறவைகள், ஆமை, தவளை, எலி, பல்லி, ஓணான், கீரி


## 05) சஞ்சரிக்கும் இயல்பைக் கொண்டு பிராணிகளை வகைப்படுத்தல்.

➢ **பகல் வேளையில் நடமாடும் பிராணிகள்**




➢ **இரவு வேளையில் நடமாடும் பிராணிகள்**



- **தனியாக நடமாடும் பிராணிகள்**
  ஆமை, பல்லி, ஓணான், முதலை, பாம்பு, பூரான், பூனை, நாய், தேள் வெட்டுக்கிளி, அணில், தவளை, நத்தை, சிலந்தி

- **கூட்டமாக நடமாடும் பிராணிகள்**
  மான், மரை, யானை, காகம், எறும்பு, வண்ணத்துப் பூச்சி, புறா, கொக்கு, நீர்க்காகம், ஆடு, மாடு, ஈசல், தேனீ, நெற்குருவி, முசுறு எறும்பு, கிளி

- **சோடியாக நடமாடும் பிராணிகள்**
  காகம், கிளி, புறா, மைனா, வாத்து, செண்பகம், குயில், ஊர்க்குருவி, முயல், வீட்டுக்குருவி, மரங்கொத்தி

- **குஞ்சுகள் / குட்டிகளுடன் நடமாடும் பிராணிகள்**
  கோழி, மயில், வாத்து, காகம், பூனை, யானை, பன்றி, குரங்கு, மான்

## 06) பிராணிகள் எழுப்பும் ஒலிகள்

| பிராணிகள் | எழுப்பும் ஒலிகள் |
|---|---|
| அணில் | கீச்.. கீச்.. எனக் கீச்சிடும் |
| ஆடு | ம்மே.. ம்மே... எனக் கத்தும் |
| பசு | ம்பா.. ம்பா.. எனக் கதறும் |
| நரி | ஊ.. ஊ.. என ஊளையிடும் |
| கிளி | கீ.. கீ.. எனக் கத்தும் |
| கோழி | கொக்.. கொக்... எனக் கொக்கரிக்கும் |
| சேவல் | கொக்கரக்கோ.. கூ.. எனக் கூவும் |
| குயில் | குக்கூ.... கூ... எனக் கூவும் |
| பல்லி | இச்.. இச்.. எனச் சொல்லும் |
| நாய் | வள்.. வள்... எனக் குரைக்கும் |
| பூனை | மியாவ்.. மியாவ்.. எனக் கத்தும் |
| காகம் | கா.. கா.. எனக் கரையும் |

## 07) உணவு உட்கொள்ளும் முறையைக் கொண்டு பிராணிகளை வகைப்படுத்தல்

| உணவை மெல்லாது விழுங்கும் பிராணிகள் | உணவை அரைத்து உண்ணும் பிராணிகள் | உணவை உறிஞ்சிக் குடிக்கும் பிராணிகள் |
|---|---|---|
| கோழி<br>பாம்பு<br>புறா<br>ஓணான்<br>மைனா<br>மீன்<br>பல்லி<br>தவளை<br>வாத்து | ஆடு, மாடு<br>நாய்<br>மனிதன்<br>பூனை<br>சிங்கம்<br>புலி<br>குதிரை<br>மான்<br>கழுமை | நுளம்பு<br>சிலந்தி<br>தேனீ<br>ஈ<br>பேன்<br>கரப்பான் பூச்சி<br>உண்ணி<br>அட்டை<br>வண்ணத்துப்பூச்சி |

**பிராணிகளின் நடத்தைக் கோலங்கள் பற்றிய பாடல்களைப் பாடுவோம்.**



**சேவல்**

கழுத்தை நீட்டிக் கூவிடுமே
காலைப் பொழுதில் சிறகடித்தே
எழுந்திரு, விழித்திரு என்றதும்
எழுப்பித் தூக்கம் ஓட்டிடுமே



**நாய்**

நன்றி உள்ள உயிர்களிலே
நல்ல மிருகம் இதுவொன்றாம்
வெற்றி கொண்ட வீரனை போல்
வீட்டைக் காத்து நின்றிடுமே



**பூனை**

பாலைக் குடித்தும் சாதுவைப் போல்
பிஞ்சக் காலால் நடந்திடுமே
வேலை அதற்கு வேறில்லை
விட்டில் எலிகள் பிடிப்பதுதான்

**- அழ வள்ளியப்பா**

## 08) பிராணிகளின் நடத்தைக் கோலங்கள்

### காலநிலை மாற்றங்களில் பிராணிகள் காட்டும் துலங்கல்கள்.

| பிராணி | மழை பெய்யும் போது | வெப்பமான வேளைகளில் | குளிரான வேளைகளில் |
|---|---|---|---|
| நாய் | ஓர் இடத்தில் ஒதுங்கி நிற்கும் | நாக்கை தொங்கவிட்டபடி நிழலில் நிற்கும் | மூலையில் ஒதுங்கி நிற்கும் |
| பூனை | வீட்டிற்குள் ஓடி ஒதுங்கும் | வீட்டிற்குள் நிற்கும் | அடுப்பங்கரையில் படுத்திருக்கும் |
| எருமை | நனைந்து கொண்டு நிற்கும். | நீரில் படுத்திருக்கும். | ஓர் இடத்தில் அசையாது நிற்கும். |
| ஆடு | ஒதுக்குப் புறமாக ஓடி ஒதுங்கும். | நிழலில் படுத்திருக்கும். | ஓர் இடத்தில் நிற்கும். |
| காகம் | சிறகுகளால் உடலை மூடும். | மரக்கொப்புகளில் நிற்கும். | கூட்டில் படுத்திருக்கும். |

### மழை வருவதற்கு முன்னர் பிராணிகளின் நடத்தைகள்

01) ஆண்மயில் தோகை விரித்து ஆடும்.

02) எறும்புகள் கூட்டமாக செல்லும்.

03) எருமை காதை மேலே உயர்த்திக் கத்தும்.

04) ஆட்காட்டிக் குருவி தாழப் பறத்தல்.

05) தூக்கணம் குருவிகள் தாழப் பறக்கும்.

### மழை நேரங்களில் பிராணிகள் காட்டும் துலங்கல்கள்

01) ஈசல்கள் புற்றிலிருந்து வெளிவரும்.

02) எருமைகள் மழையில் நனைந்தபடி நிற்கும்.

03) நாய்கள் சூடான இடத்தில் படுத்திருக்கும்.

04) தவளைகள் கத்தும்.

## ஒரு பிராணி இன்னொரு பிராணியைக் காணும் போது காட்டும் துலங்கல்கள்

| பிராணி | கண்டு கொள்ளும் பிராணி | காட்டும் துலங்கல்கள் |
|---|---|---|
| நாய் | பூனை | வெறுப்பைக் காட்டும் |
| பூனை | எலி | வெறுப்பைக் காட்டும் |
| காகம் | கோழி | துலங்கலைக் காட்டாது |
| ஆடு | மாடு | விருப்பைக் காட்டும் |
| அணில் | குருவி | துலங்கலைக் காட்டாது |
| கீரி | பாம்பு | வெறுப்பைக் காட்டும் |
| பருந்து | கோழி | பயந்து ஒதுங்கும் |
| பாம்பு / வேறு பிராணிகள் | அணில் | வாலைச் சிலிர்த்து ஓடும் |
| காகம் | பாம்பு | சப்தமாக கரையும் |

## பிராணிகளிடம் காணக்கூடிய நற்பழக்கங்கள்

| பிராணிகள் | காணக்கூடிய நல்ல பழக்கங்கள் |
|---|---|
| சேவல் | அதிகாலையில் எழுந்திருத்தல் |
| பூனை | சுத்தம் (தனது கழிவை குழி தோண்டி புதைத்தல்) |
| மாடு, யானை | தலைவனைப் பின்பற்றுதல் |
| எறும்பு, தேனீ | குழுவாகச் செயற்படல், உணவு சேகரித்தல் |
| காகம் | தூய்மை, கூடி உண்ணல் |
| புறா | பொறுமை, அமைதி |
| யானை | தலைமைத்துவம் |
| நாய் | அடிபணிவு, நன்றி |

## பிராணிகளின் நடத்தைக் கோலங்கள் மனிதனுக்குப் பயன்படும் விதங்கள்

01) இனந்தெரியாத ஒருவர் வந்தால் நாய் குரைத்து வீட்டுக்கு ஒருவர் வந்துள்ளமையை அறிவிக்கிறது.

02) நச்சுப்பாம்புகள் கண்டவுடன் அணில், பறவைகள் போன்றன குரலெழுப்பி ஆபத்தை தடுக்கிறது.

03) அதிகாலை ஆரம்பிப்பதை சேவல் கூவி அறிவிக்கிறது.

04) மழை பெய்ய முன்னர் ஆட்காட்டிக்குருவி பறத்தல், ஈசல் வெளிப்படுவதல் என்பவற்றின் மூலம் வானிலை மாற்றங்களை அறிந்து கொள்ளலாம்.

## 09) பிராணிகள் எமது சூழலில் வாழ்வதன் முக்கியத்துவத்தை அறிந்து கொள்வோம்.





- சூழல் அழகு பெறும்.
- உணவுத் தேவைகள் பூர்த்தி செய்யப்படுகின்றன.
- சூழல் சமநிலை பேணப்படுகிறது.
- மனிதனது வேலைகளை இலகுபடுத்த உதவுகிறது.
- தாவரங்களின் இனப்பெருக்கத்திற்கு உதவுகிறது.

### பிராணிகளால் மனிதன் பெற்றுக் கொள்ளும் பயன்கள்

| பிராணிகள் | பெற்றுக் கொள்ளும் பயன்கள் |
|---|---|
| மாடு | ❖ வண்டி இழுத்தல்.<br>❖ வயல் உழுதல்.<br>❖ பால் பெறல் |
| நாய் | ❖ வீட்டைக் காத்தல்<br>❖ வேட்டையாடல்.<br>❖ மோப்பம் பிடித்தல். |
| யானை | ❖ சவாரி செய்தல்.<br>❖ பெரிய மரங்களைத் தூக்குதல். |
| கோழி | ❖ இறைச்சி பெறல்.<br>❖ முட்டை பெறல்.<br>❖ பசளை பெறல். |
| ஆடு | ❖ இறைச்சி பெறல்.<br>❖ பால் பெறல்.<br>❖ பசளை பெறல். |
| குதிரை | ❖ பயணம் செய்தல். |
| பூனை | ❖ எலித் தொல்லையிலிருந்து பாதுகாத்தல். |
| கழுதை | ❖ பொதி சுமத்தல். |

**பிராணிகள் இல்லாவிட்டால் சூழலில் ஏற்படும் மாற்றங்கள்.**

- சூழல் அழகு அற்றுப் போகும்.
- உணவுத் தட்டுப்பாடு ஏற்படும்.
- சூழல் சமநிலை பாதிக்கப்படும்.
- மனிதனின் வேலைச்சுமை அதிகரிக்கும்.
- தாவரங்கள் எண்ணிக்கை கூடும்.

## 10) வீட்டில் வளர்க்கும் பிராணிகள் தொடர்பாக கவனம் செலுத்துவோம்.

- பிராணிகளை வளர்க்கும் காரணங்களை பின்வருமாறு வகைப்படுத்தலாம்

**01. செல்லப்பிராணியாக வளர்த்தல்.**

(உ-ம்)

நாய், பூனை, அணில், கிளி, மைனா, புறா

**02. பொருளாதாரக் காரணங்களுக்காக வளர்த்தல்.**

(உ-ம்)

ஆடு, மாடு, கோழி, புறா, முயல், வாத்து, வான்கோழி, காடை, பன்றி, தேனீ

**03. பாதுகாப்புக்காக வளர்த்தல்.**

(உ-ம்)

நாய்

**04. வேறு தேவைகளுக்காக வளர்த்தல்.**

(உ-ம்)

குதிரை - சவாரி செய்ய, ஓட்டப் பந்தயத்திற்கு

கழுதை - சுமைகளை கொண்டு செல்வதற்கு

## வீட்டில் வளர்க்கும் பிராணிகளை பராமரிக்கும் முறைகள்

01. அப்பிராணிகள் எம்மைப் போன்ற ஒரு உயிர் ஆகும் என நினைத்து பராமரிக்க வேண்டும்.

02. அவற்றிற்கு உரிய வேளைக்கு உணவு, நீர் என்பன கொடுத்தல் வேண்டும்.

03. அவற்றின் சுத்தம் தொடர்பாக கவனம் செலுத்த வேண்டும்.

04. அவற்றை அடைத்து வைத்து துன்புறத்தாமல் சுதந்திரமாக நடமாட விட வேண்டும்.

05. உரிய சந்தர்ப்பங்களில் தடுப்பு மருந்துகளை வழங்குதல் வேண்டும்.

06. களி, மைனா, புறா போன்றவற்றை பூனை, நாய் என்பன தாக்காது பாதுகாத்தல் வேண்டும்.

07. அவற்றிற்கு தேவையான இருப்பிட வசதிகளை செய்து கொடுக்க வேண்டும்.

08. அவற்றுடன் அன்பாக நடக்க வேண்டும்.







## பறவைகளின் வாழ்விடங்கள்.





## பிராண மாதிரி உருவைச் செய்து விளையாடுவோம்.

❖ சூழலில் கிடைக்கும் குறைவான மூலப்பொருட்களைக் கொண்டு பிராணியொன்றின் மாதிரியை அமைக்குக.

❖ அம்மாதிரியின் கீழ்புறத்தில் குண்டூசி / கடதாசி கவ்வி (Paper Clip) இணைத்து தடித்த அட்டைத் துண்டின் மீது வைக்குக.

❖ அவ்வட்டையின் கீழ்புறத்தே காந்தமொன்றினை அங்குமிங்கும் அசைப்பதன் மூலம் பிராணி உரு அசைவதை பார்த்து மகிழுங்கள்.




### அறிந்து கொள்வோம்.....

- ❖ இலங்கையின் தேசிய பறவை காட்டுச் சேவல் ஆகும்.
- ❖ தலை கீழாகத் தூங்கும் பறவை வௌவால் ஆகம்.
- ❖ கூடு கட்டத் தெரியாத பிராணி குயில் ஆகும்.
- ❖ எறும்புகள், தனது நிறையைப் போல 50 மடங்கு நிறையை தூக்கிச் செல்லும்.
- ❖ பூனை தனது கழிவை குழி தோண்டி புதைக்கும் பழக்கமுடைது.
- ❖ புறா அமைதியான சுவாபம் கொண்டதானாலேயே சமாதானத்தின் சின்னமாக கருதப்படுகிறது.
- ❖ கடதாசியை மடித்து செய்யப்படும் ஆக்கம் “ஒரிகாமி” ஆக்கம் எனப்படும்.
- ❖ இரவு வேளையில் வெளிச்சத்தை வெளியிடும் பராணி மின்மினிப்பூச்சி ஆகும்.
- ❖ நுளம்பினால் மலேரியா, டெங்கு, யானைக்கால், சிக்கன்குன்யா போன்ற நோய்கள் ஏற்படுகின்றன.
- ❖ முசுறு மரத்தின் இலைகளை இணைத்து கூடு அமைக்கிறது.
- ❖ சிலந்தி வலை போன்ற வாழ்விடத்தை அமைக்கிறது.

## *பயிற்சி*

**01) சரியான விடையின் கீழ் கோடிடுக.**

01. பசளை பெற்றுக் கொள்ள பிராணி எது?
   1. நாய் 2. எருது 3. பன்றி

02. தலைவனைப் பின்பற்றும் பிராணி எது?
   1. சேவல் 2. முயல் 3. யானை

03. குழுவாகச் செயற்படும் பிராணி
   1. பூனை 2. எறும்பு 3. கோழி

04. தத்திச் செல்வதன் மூலம் இடம்பெயரும் பிராணி
   1. ஓணான் 2. தவளை 3. முதலை

05. குட்டிகளின் திரியும் பிராணி
   1. கோழி 2. கழுதை 3. யானை

06.  அருகிலுள்ள பறவையின் பெயர் என்ன?
   1. குயில் 2. மைனா 3. செண்பகம்

07. நாயொன்று இன்னொரு நாயைக் கண்டால் காட்டும் துலங்கல் யாது?
   1. வாலாட்டும் 2. அமைதியாக இருக்கும் 3. சப்தமாக குரைக்கும்

08. மழை பெய்யப்போவதை முன்கூட்டியே அறிய உதவும் பிராணியின் நடத்தை
   1. ஆட்காட்டிக் குருவி தாழ்வாகப் பறத்தல்
   2. காகம் கரையும்
   3. எருமை மாடு நீரில் படுத்திருக்கும்

09. அதிகாலையில் நடமாடும் பிராணியாக அமையாதது
   1. சேவல் 2. மயில் 3. காகம்

10. மழை வரப்போவதை அறிவிக்கும் ஓர் பிராணி அல்லாதது
   1. ஈசல் 2. காகம் 3. ஆட்காட்டிக் கருவி

**02) பொருத்தமானதை இணையுங்கள்**

| | | |
|---|---|---|
| 01. | எட்டுக்கால் கொண்டது | வெட்டுக்கிளி |
| 02. | ஊர்ந்து செல்லும் பிராணி | சிலந்தி |
| 03. | ஆறுகால் கொண்டது | அட்டை |
| 04. | தத்திச் செல்லும் பிராணி | எலி |
| 05. | புத்தகத்தை சேதமாக்குவது | தவளை |

**03) அடைப்புக்குள் தரப்பட்ட சொற்களைக் கொண்டு இடைவெளி நிரப்புக.**

**(ஆறு, வண்ணத்துத்துப் பூச்சி, பழக்கங்களை, சிறகுகள், குயில்)**

01. பிராணிகளிடம் காணப்படும் நல்ல .............................. நாம் பின்பற்றலாம்.
02. காகத்தின் கூட்டில் ........................ முட்டையிடும்.
03. பூச்சிகள் அனைத்திற்கும் ....................... கால்கள் உள்ளன.
04. .................................... பூவில் தேன் குடிக்கும்.
05. பறவைகள் பறப்பதற்கு ............................. அவசியமாகும்.

**04) பொருத்தமான பிராணிகளை உரிய அடைப்பிற்குள் எழுதுவோம்.**

மாடு, குயில், பாம்பு, அணில், யானை, பருந்து, பல்லி, முயல், வாத்து, நாய், பூரான், கழுதை, காகம், மரவட்டை, அட்டை

| நடப்பன | பறப்பன | ஓடுவன | ஊர்வன |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

## 05) பொருத்தமான விடை எழுதுங்கள்.

01. விலங்குகள் இரண்டின் பெயர் எழுதுங்கள்?

………………………. …………………………..

02. பறவைகள் இரண்டின் பெயர் எழுதுங்கள்?

………………………. …………………………..

03. ஊர்ந்து செல்லும் பிராணிகள் இரண்டின் பெயர் எழுதுங்கள்?

……………………….. ……………………………

04. பூச்சிகள் இரண்டின் பெயர் எழுதுங்கள்?

……………………….. ……………………………

05. நடப்பதன் மூலம் இடம்பெயரும் பிராணிகள் இரண்டு தருக?

……………………….. …………………………….

06. வீடுகளில் வளர்க்கப்படும் பிராணிகள் இரண்டு தருக?

……………………….. …………………………….

07. நான்கு கால் உள்ள பிராணிகள் இரண்டு தருக?

……………………….. ……………………………..

08. மிகப்பெரிய பிராணிகள் இரண்டு தருக?

………………………. ……………………………..

09. கூட்டமாக வாழும் பிராணிகள் இரண்டு தருக?

………………………. ……………………………..

10. பின்வருவனவற்றிற்கு உரித்தான பிராணிகளின் பெயர்களை எழுதுக?

மழை வருவதை அறிவித்தல் - ………………………………

அதிகாலையை அறிவித்தல் - ………………………………

இனந்தெரியாதவரை அறிவித்தல் - ………………………………

11. பிராணிகளால் சூழல் பெறும் நன்மைகள் 2 தருக?

…………………………………………………………………

…………………………………………………………………

12. செல்லப்பிராணிகளை பராமரிக்கும் விதங்கள் இரண்டு தருக?


…………………………………………………………………

…………………………………………………………………


# அலகு - 04
# நீருடன் விளையாட்டு

**01) எமது அன்றாட வாழ்வில் வேலைகளுக்கு நீர் பயன்படும் சந்தர்ப்பங்களை அறிந்து கொள்வோம்.**



பருகுதல் | உணவு சமைத்தல் | துணி துவைத்தல் | குளித்தல்/நீராடுதல்



விவசாயம் செய்தல் | தாவரங்களின் வளர்ச்சிக்கு | பாத்திரம் கழுவுதல்






தேநீர் தயாரித்தல் | பூந்தோட்டத்திற்கு பாய்ச்சுதல். | பயணம் செய்தல்





முகம் கழுவுதல் | பானம் தயாரித்தல் | பதார்த்தங்களை கரைத்தல்.






மின்சார உற்பத்தி | வாகனம் கழுவுதல் | கை கழுவுதல்

# நீரைப் பெற்றுக் கொள்ளும் வழிகள்.




நீர்க்குழாய் மூலம்




ஆறுகள் மூலம்



ஓடைகள் மூலம்



குளங்கள் மூலம்




கிணறுகள் மூலம்

# நீர் இல்லாவிட்டால் ஏற்படும் நிலமைகள்








- ❖ வரட்சி ஏற்படும்.
- ❖ மரஞ்செடி கொடிகள் உர்ந்து போகும்.
- ❖ நிலம் வெடிப்புறும்.
- ❖ நீர் ஊற்றுக்கள் வற்றிப்போகும்.
- ❖ உணவுத் தட்டுப்பாடு நிலவும்.
- ❖ தாவரங்களும் பிராணிகளும் இறக்கும் அபாயம் ஏற்படும்.
- ❖ புவியின் வெப்பநிலை அதிகரிக்கும்.

# தாவரங்களுக்கு நீர் அவசியம் எனக் காட்டுவோம்

❖ காசித்தும்பை, கங்குன், வத்தாளை போன்ற தாவர வகைகளில் ஒத்த இரண்டு தாவரங்களைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

❖ அவற்றுள் ஒன்றை நீர் உள்ள பாத்திரத்திலும் மற்றையதை நீர் அற்ற பாத்திரத்திலும் இடுக.

❖ சிறிது நேரத்தின் பின் இடைக்கிடையே அவதானிக்குக.



❖ சிறிது நேரத்தின் பின் நீர் உள்ள பாத்திரத்தில் உள்ள தாவரம் செழிப்பாகவும், நீரற்ற பாத்திரத்திலுள்ள தாவரம் வாடியும் காணப்படுவதை அவதானிக்கலாம்.

❖ எனவே தாவரங்களின் வளர்ச்சிக்கும் அதன் நிலையான இருப்புக்கும் நீர் அவசியமாகும்.

❖ **இதேபோன்று எமது உடற்சுகாதாரத்தைப் பேணுவதற்காகவும் தினமும் போதுமான அளவு நீரை பருக வேண்டும்.**

## 02) நீரின் முக்கியத்துவத்தை அறிந்து கொள்வோம்.



- ❖ இந்த புவியில் நாம் அருந்தப் பயன்படுத்த இருக்கும் நீர் மிகவும் சொற்ப அளவிலேயே காணப்படுகின்றது.
- ❖ ஆகவே "நீர் ஒரு பெறுமதிமிக்க வளமாகும்"

### நீரைப் பாதுகாக்க நாம் செய்ய வேண்டியவை

- ➢ நீர்ப்பாத்திரங்களிலுள்ள நீர் மாசடையாதவாறு மூடி வைத்தல்.
- ➢ பிராணிகளின் எச்சம் விழாதவாறு கிணற்றை மூடி வைத்தல்.
- ➢ நீர் உள்ள இடங்களில் குப்பைகளை கொட்டுவதைத் தவிர்த்தல்.




- ➢ பிரயாணங்கள் - சுற்றுலாக்களின் போது நீர் நிலையிலோ அவற்றுக்கு அண்மையிலோ குப்பை கூளங்கள் இடுவதைத் தவிர்த்தல்.
- ➢ நீர் துளித்துளியாக ஒழுகும் இடங்களில் பாத்திரங்களை வைத்தல்.



- ➢ தேவையான நேரங்களில் மட்டும் நீர்க்குழாய்களை திறந்து பாவித்தல்.







- ➢  நீர்க்குழாய்களில் ஏற்படும் ஒழுக்கு காரணமாகவே அதிகமான நீர் வீண்விரயம் ஏற்படுகின்றது. இதனை நாம் நீர் ஒழுக்குள்ள இடத்தில் பாத்திரத்தை வைத்து நிமிடத்துக்கு நிமிடம் அவதானித்தால் பாத்திரத்தில் நீர் அதிகரித்துச் செல்வதை காணமுடியும்.
- ➢ ஆகவே நாம்,
  - ✓ கை கழுவும் வேளையில்
  - ✓ முகம் கழுவும் வேளையில்
  - ✓ பல்துலக்கும் வேளையில் போன்ற சந்தர்ப்பங்களில் நீர்க்குழாயை இறுக்கமாக மூடிவிட வேண்டும்.
  - ✓ மேலும் நீர் ஒழுகும் குழாயைக் கண்டால் மூடிவிட வேண்டும்.

## 03) பாய்ந்து செல்லும் நீரின் இயல்புகளை அறிவோம்.

❖ கூரைப்பீலித்துண்டு / வாழைத்தண்டிலிருந்து கழற்றியெடுத்த வாழைமடல், நீர், பாத்திரம் என்பவற்றை பெற்றுக் கொள்ளுங்கள்.

❖ உங்கள் வகுப்பறையின் வெளியிடம் ஒன்றிற்குச் சென்று பீலிகளின் வழியே வழிந்தோடும் நீரை பாத்திரங்களில் சேகரிக்குக.



❖ பீழியுடன் நீரை இட்டவுடன் யாது நடைபெறும்?

..........................................................................

❖ பீலியின் அந்தத்தை சற்று உயர்த்தி வைத்து நீரை இட்டால் யாது நடைபெறும்? ..........................................................

❖ நீர் பாய்ந்து செல்லும் பீலியினுள் பின்வரும் பொருட்களை இட்டு உமது அவதானங்களை பட்டியல்படுத்துங்கள்.

| பொருட்கள் | பெறப்படும் அவதானம் |
|---|---|
| கடதாசி உருண்டை | |
| ரெஜிபோம் துண்டு | |
| துணித்துண்டு | |
| பஞ்சு | |
| கல் துண்டு | |

## 04) வெவ்வேறு பொருட்கள் நீருடன் காட்டும் நடத்தைகளை அறிந்து கொள்வோம்.

- ❖ வெந்நிறக் கடதாசியொன்றில் நிறமூட்டிய இரண்டு நீர்த்துளிகளை சற்று தூரத்தில் இட்டு அவற்றுள் ஒரு துளியை வாயினால் ஊதி வெவ்வேறு கோலங்களை ஆக்குக.
- ❖ இங்கு பரப்பிய நீரானது காற்றின் காரணமாக உலரந்து காணப்படுவதையும் பரப்பாத நீர்த்துளி சற்று தாமதாகி படிப்படியாக உலர்வதையும் அவதானிக்கலாம்.

### ஓரிடத்திலுள்ள நீரை அகற்றக்கூடிய முறைகள்

- ➢ கூடுதலான நீர் எனின் வழிந்தோடச் செய்தல்.
- ➢ குழிகளை வெட்டி அதற்குள் நீரை வழிந்தோடச் செய்தல்.
- ➢ நீர் பரவிச் செல்வதற்கான வழிகளைச் செய்தல்.
- ➢ நீரின் மீது காற்றைப் பயன்படுத்தல்.

### ஓரிடத்திலுள்ள நீரை துணித்துண்டின் மூலம் அகற்றும் வழிகள்.

- ➢ துணித்துண்டினால் துடைத்தல்.
- ➢ நீரை ஒற்றியெடுத்துப் பிழிதல்.
- ➢ நீருள்ள இடத்தில் துணித்துண்டை விரித்து இழுத்துச் செல்லல்.

### காற்றை பயன்படுத்தி நீரை அப்புறப்படுத்தும் வழிமுறைகள்.

- ➢ தரையில் பதிந்த பாதச்சுவடுகளை காற்று வீசி உலரச் செய்தல்.
- ➢ நிறந்தீட்டிய ஈரச் சித்திரமொன்றை உலர்த்துவதற்காக அங்குமிங்கும் அசைத்தல்.
- ➢ கைக்குட்டையை கழுவி தொங்கவிட்டு காற்றில் உலரச் செய்தல்.
- ➢ மின்விசிறியால் ஈரமான உடையை உலர்த்துதல்.
- ➢ விசிறியால் வியர்வையை போக்குதல்.
- ➢ தலைமயிர் உலர்த்தும் கருவியால் முடியில் உள்ள நீரை அகற்றுதல்.

## ஓரிடத்திலிருந்து நீரை வழிந்தோடச் செய்யும் முறைகள்.

- வாய்கால்கள் மூலமாக வழிந்தோடச் செய்தல்.
- பீலிகள் மூலமாக கூரையிலுள்ள நீரை வழிந்தோடச் செய்தல்.
- முற்றத்திலுள்ள நீரை குழிகள் மூலமாக வழிந்தோடச் செய்தல்.
- வயல்களில் உள்ள நீரை கால்வாயினூடாக வழிந்தோடச் செய்தல்.
- குழாய்கள் மூலமாக வழிந்தோடச் செய்தல்.

## 05) நீரில் கரையும், கரையாத பொருட்களை பொருட்களை அறிந்து கொள்வோம்.

| நீரில் கரையும் பொருட்கள் | நீரில் கரையாத பொருட்கள் |
|---|---|
| சீனி, உப்பு சவர்க்காரம், கொண்டிஸ், மா, நீலம், சர்க்கரை, மதுசாரம், சுண்ணாம்பு, யூரியா, வினாகிரி, மை வகைகள், தேயிலை, நீலப்பொடி | கல், மண், பலகை, துணிகள், பலாப்பால், பெற்றோல், மண்ணெண்ணெய், தார், தேங்காயெண்ணெய், பிசின், இரும்பு, பிளாத்திக்கு |

### நீரில் கரையும் பொருட்களால் பெறப்படும் பயன்கள்

- நீரை சுத்திகரிக்கலாம்.
- சித்திரங்களுக்கு நிறந்தீட்டலாம்.
- சுவரில் நிறப்பூச்சுக்கள் பூசலாம்.
- சுத்தம் செய்ய பயன்படும்.

## இரண்டு நிறங்களை கலந்து வேறு நிறமொன்றை உருவாக்கும் முறைகள்.


- சிவப்பு + கறுப்பு → கபிலம்
- சிவப்பு + நீலம் → ஊதா
- சிவப்பு + மஞ்சள் → செம்மஞ்சல்
- மஞ்சல் + நீலம் → பச்சை
- கடும் நிறம் + வெள்ளை → இள நிறம்

## 06) நீர் தொடர்பான ஆக்கங்களில் ஈடுபடுவோம்.


### நீரைக் கொண்டு ஒலிநாதங்களை எழுப்பி மகிழ்வோம்.

பின்வருமாறு கண்ணாடிக் குவளை அல்லது கண்ணாடிப் போத்தல்களில் நீரினை படிமுறையாக கூடிக் குறைந்து செல்லும் வகையில் நிரப்பி உலோகக் கரண்டியினால் குவளையின் நடுப்பகுதி, மேற்பகுதி, நீர் உள்ள இடம், நீர் இல்லாத இடம் என்பவற்றில் தட்டி எழும் ஒலிகளை கேட்டு மகிழுங்கள்.

படிமுறையாகக் குடுதல்



படிமுறையாகக் குறைதல்



### போத்தலினுள் வெவ்வேறு மட்டங்களில் நீரை இட்டு வாயினால் ஊதி ஒலி எழுப்பி மகிழ்வோம்.



- சிறிய வாய் கொண்ட போத்தலை எடுத்து வெவ்வேறு உயர மட்டங்களில் நீரை எடுத்து அதனை தமது வாயின் அருகே கொண்டு சென்று தாளப்படி ஊதி மகிழுக.
- பின்னர் இதனை வெவ்வேறு வடிவம் கொண்ட போத்தல்களில் ஊற்றி வாயினால் ஊதி ஒலி வேறுபாட்டை அறிந்து கொள்க.

### குழாய்களைக் கொண்டு பாத்திரத்திலுள்ள நீரை ஊதும் செயற்பாட்டில் ஈடுபடுவோம்.



- பேனைக்குழாய் அல்லது பானக்குழாயை ஒன்றை எடுத்து நீர் அடங்கியுள்ள பாத்திரத்தினுள் ஊதுவோம்.
- இங்கு குமிழிகளோடு எழும் ஓசைகளை கேட்டு மகிழ்வோம்.

## அறிந்து கொள்வோம்....

| நீரில் மிதக்கும் பொருட்கள் | நீரில் அமிழும் பொருட்கள் |
|---|---|
| ரெஜிபோம், இறப்பர் பந்து, இலைகள், தடிகள், பலகைத் துண்டுகள், பிளாத்திக்குப் பொருட்கள், காய்கள், இறகுகள், இலைச்சருகுகள், பொலித்தீன், கடதாசி உருண்டை | கற்கள், இரும்பு, கண்ணாடித் துண்டு, ஊசி, நாணயங்கள், மாபிள் துண்டுகள், ஆணி, குண்டுசி |

- நீரை சுத்திகரிக்க ‘‘குளோரின்’’ எனும் இரசாயணப் பொருள் பயன்படுகிறது.
- நாம் எப்போதும் கொதித்தாறிய நீரையே பருக வேண்டும்.
- பெற்றோல், தின்னர், மண்ணெண்ணெய், ஒடிக்லோன் போன்றன நிலத்தில் விழும் போது, மிக வேகமாக பரவிச் செல்லும்.
- தேங்காய் எண்ணெய், நல்லெண்ணெய், ஆமணக்கெண்ணெய் போன்றன நிலத்தில் விழும் போது வழுக்கும் தன்மையை ஏற்படுத்தும்.
- நீரைக்கொண்டு பாத்திரங்களில் ஒலி எழுப்பும் செயற்பாடு ‘‘ஜலதரங்கம்’’ எனப்படும்.

# பயிற்சி

## 01) சரியான விடையின் கீழ் கோடிடுக.

01. நீரில் கரையும் பொருள் எது?
    1. கிறீஸ் 2. சவர்க்காரம் 3. தார்

02. மிகவும் சுத்தமான நீரைப் பெறும் இடம்
    1. ஆறு 2. கிணறு 3. குளம்

03. பீலியை சற்று உயர்த்திப் பிடித்து நீரை ஊற்றும் போது யாது நிகழும்?
    1. நீர் மேல் நோக்கிப் பாயும் 2. நீர் அசையாது இருக்கும்
    3. நீர் பள்ளத்தை நோக்கி யாயும்.

04. பாயும் நீரினால் எடுத்துச் செல்லப்படும் பொருள் எது?
    1. கற்பாறை 2. இரும்பு ஆணி 3. பென்சில்

05. சிவப்பு நிறத்தையும் நீல நிறத்தையும் கலக்கும் போது பெறப்படும் நிறம்
    1. ஊதா 2. கபிலம் 3. நீலப்பச்சை

06. சிவப்பு, கறுப்பு ஆகிய இரு நிறங்களைக் கலப்பதால் கிடைக்கும் நிறம்
    1. பச்சை 2. கபிலம் 3. மஞ்சள்


07. மஞ்சள், நீலம் ஆகிய நிறங்களைக் கலப்பதால் கிடைக்கும் நிறம்
    1. ஊதா 2. பச்சை 3. சிவப்பு

08. சிவப்பு நிறத்துடன் வெள்ளை நிறத்தை கலக்கும் போது கிடைக்கும் நிறம்
    1. கபிலம் 2. இளஞ்சிவப்பு 3. கடும் சிவப்பு


09. நீருடன் நன்கு கரையக்கூடிய பொருள்
    1. நீலம் 2. தேங்காய் எண்ணெய் 3. மண்ணெண்ணெய்

10. காற்றை பயன்படுத்தி உலரச் செய்யக் கூடிய திரவம்
    1. நீர் 2. தேங்காய் எண்ணெய் 3. பால்

11. நீரில் கரையாத பொருள் எது?
    1. சவர்க்காரம் 2. தார் 3. மாவு



12. படத்திலுள்ளவாறு அமைக்கப்பட்ட நீர் இசைக்கருவியின் பெயர் யாது?
    1. ஜலதரங்கம் 2. நீர் வாத்தியம் 3. சுரவரிசை

13. 
    படத்திலுள்ள நீர்க்குவளையினுள் பானக்குழாயை வைத்து ஊதும் போது, அவதானிக்கக் கூடியது,
    1. நீர் சூடாகும் 2. வளிக்குமிழிகள் தோன்றும்
    3. நீர்க்குவளை அதிரும்

14. பருகுவதற்கு மிகவும் உகந்த நீர்
    1. குளிரான நீர் 2. கிணற்று நீர் 3. கொதித்தாறிய நீர்

15. நீர் அசுத்தமடையும் வழிகளில் ஒன்று
    1. நீர்ப்பாத்திரத்தை மூடி வைத்தல்.
    2. நீருள்ள இடத்தில் குப்பைகளை கொட்டுதல்
    3. மேலதிக நீரை சேமித்து வைத்தல்.

**02) சரி (✓) பிழை (✗) கூறுக.**

01. நீர் வர்ணங்களை நீரில் கரைத்துப் பயன்படுத்தலாம் (     )
02. பச்சை நிறத்துடன் வெள்ளை நிறத்தை கலந்தால் இளம்பச்சை பெறப்படும். (     )
03. ஈரமான ஆடையை காற்றில் உலர்த்த முடியாது. (     )
04. ஓடும் நீரானது பொருட்களை எடுத்துச் செல்லும். (     )
05. பலாப்பிசின் நீரில் கரையும். (     )
06. நீர் வழிந்தோட பீலிகள் உதவுகின்றன. (     )
07. மண்ணெண்ணெய் நீரின் மேல் மிதக்கும் திரவமாகும். (     )
08. தேங்காய் எண்ணெய் நீரில் நன்றாகக் கரையும். (     )
09. உயரமான இடத்திலிருந்து நீர் பள்ளமான இடத்தை நோக்கி விரைவாகப் பாய்ந்தோடும். (     )
10. ரெஜிபோம் நீரில் அமிழும். (     )

**03) பொருத்தமான சொற்களைக் கொண்டு இடைவெளி நிரப்புங்கள்.**

**(பள்ளம், குளோரின், பாய்ந்து, கொதித்தாறிய, காற்றினால், ஜலதரங்கம்)**

01. நீர் ........................... ஓடும் தன்மை வாய்ந்தது.
02. நீரை சுத்திகரிக்க ......................... பயன்படுகிறது.
03. நாம் எப்போதும் ................................ நீரையே பருக வேண்டும்.
04. கண்ணாடிக்குவளையில் நீரை நிரப்பி, கோலினால் தட்டும் போது நாதம் எழுப்பும் கருவி ........................... ஆகும்.
05. நீரானது ..................... உள்ள இடத்தை நோக்கி விரைவாக பாய்ந்து ஓடும்.
06. நீரமான ஆடையிலுள்ள நீரை ..................... அகற்றலாம்.

**04) பொருத்தமானவற்றுடன் இணைக்குக.**

| | | |
|---|---|---|
| 01. | நீரை அகற்றுதல் | இரும்பு |
| 02. | பாரம் குறைவான பொருள் | கிணறு |
| 03. | நீரில் அமிழ்தல் | ஆடை கழுவுதல் |
| 04. | நீரின் பயன்களில் ஒன்று | நீரில் மிதக்கும் |
| 05. | நீர் பெறப்படும் இடம் | பிழிதல் |

**05) கீழே தரப்பட்ட பொருட்களை பயன்படுத்தி அட்டவணையை நிரப்புக.**

ஆணி, கடதாசி, மாபிள், சவர்க்காரம், உப்பு, கற்கண்டு, பந்து, சீப்பு, பென்சில், குளுக்கோசு, கண்ணாடி, நாணயம், சைக்கிள் சன்னம், சீனி, இறப்பர் பந்து, நீலம், கல், இரும்பு, மா, ரெஜிபோம், புடைவை, பலகை, மண்ணெண்ணெய், தேங்காய், சவர்க்காரம்

| நீரில் மிதக்கும் பொருட்கள் | நீரில் அமிழும் பொருட்கள் | நீரில் கரையும் பொருட்கள் | நீரில் கரையாத பொருட்கள் |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

**06) பொருத்தமான விடை எழுதுங்கள்.**

01. நாம் நீரை பெற்றுக் கொள்ளும் வழிகள் இரண்டு தருக?

……………………………… ………………………………

02. நீரில் நன்கு கரையக் கூடிய பொருட்கள் இரண்டு தருக?

……………………………… ………………………………

03. நீரினால் நாம் பெறும் பயன்கள் இரண்டு எழுதுங்கள்?

……………………………… ………………………………

04. நீரில் கரையும் பதார்த்தங்களால் எமக்கு கிடைக்கும் பயன்கள் இரண்டு எழுதுங்கள்?

……………………………………………………………………

……………………………………………………………………

05. பின்வரும் நிறங்களை கலக்கும் போது பெறப்படும் நிறங்களை எழுதுக?

| | | | | |
|---|---|---|---|---|
| சிவப்பு | + | கறுப்பு | → | ……………………………… |
| மஞ்சள் | + | நீலம் | → | ……………………………… |
| சிவப்பு | + | நீலம் | → | ……………………………… |
| பச்சை | + | வெள்ளை | → | ……………………………… |
| கறுப்பு | + | வெள்ளை | → | ……………………………… |

06. நீர் இசைக்கருவி எவ்வாறு அழைக்கப்படும்?

……………………………………………………………………

07. அன்றாட வாழ்வில் காற்றைப் பயன்படுத்தி நீரை உலரச் செய்யும் சந்தர்ப்பங்கள் இரண்டு தருக?

……………………………………………………………………

……………………………………………………………………

08. தரையும் சிந்திய நீரை அகற்றும் வழிகள் இரண்டு தருக?

……………………………………………………………………

……………………………………………………………………

# அலகு - 05


# புத்தாண்டு காலம்

## 01) புத்தாண்டு பண்டிகைக் காலத்தில் சுற்றாடலில் ஏற்படும் மாற்றங்கள்.





- குயில் கூவுதல்.
- முள்முருங்கை பூத்திருத்தல்.
- மா, றம்புட்டான், ஜம்பு மரங்களில் காய்கள் காய்த்திருத்தல்
- மரஞ்செடி கொடிகளில் இலைகள் உதிர்ந்து புதிய தளிர்கள், இலைகள் தோன்றியிருத்தல்.
- பறவையினங்கள் பூக்களை நாடி வரும்.
- பறவையினங்களின் குரலோசைகள் அதிகமாக இருக்கும்.
- இக்காலம் வசந்த காலமாக இருக்கும்.



**புதிய மாற்றம்**

முள்முருங்கை பூக்கின்றது
முத்து முத்தாய் தெரிகின்றது

மா, பலா காய்க்கின்றது
மரங்களிலே புதிய தளிர்கள் வருகின்றன

பறவைகளும் வந்து சேர்கின்றன
புதிய உலகைப் பார்க்கின்றன

புத்தாண்டும் மலர்கின்றது
புதிய வாழ்வைத் தருகின்றது

## புத்ததாண்டு காலத்தில் காணப்படும் பொதுவான மாற்றங்கள்.



- பணப்புழக்கம் அதிகளவில் காணப்படும்.
- வீதிகளில் சனநெருக்கடி அதிகரித்தல்.
- நடைபாதையில் வியாபாரிகள் அதிகமாக காணப்படுவர்.
- புத்ததாண்டுச் சந்தைகள் உருவாகுதல்.
- கடைகளில் பொருட்கள் நிரம்பி வழியும்.



புத்ததாண்டு காலச் சந்தை

## புத்தாண்டு காலத்தில் வீடுகளில் ஏற்படும் மாற்றங்கள்






- ❖ வீடுகளை சுத்தம் செய்தல்.
- ❖ வீடுகளை பழுது பார்த்து அழகுபடுத்தல்.
- ❖ புதிய தளபாடங்கள் வாங்குதல்.
- ❖ உணவுப் பொருட்கள் சேகரித்தல்.
- ❖ திண்பண்டங்கள் தயாரித்தல்.
- ❖ புதிய ஆடைகள் தைத்தல்.
- ❖ வெளியிடங்களில் தொழில் புரிவோர் புத்தாண்டுக் கொண்டாட்டத்துக்காக வீடு செல்லல்.
- ❖ வீடுகளுக்கு உறவினர்கள் வருதல் மூலம் உறவுகள் புதிப்பிக்கப்படுதல்.

## 02) புத்ததாண்டு கால பாரம்பரியங்கள்.

### புத்ததாண்டு கால பழக்கவழக்கங்கள்









- ❖ புத்தாடை அணிதல்.
- ❖ புண்ணிய காலத்தில் சமயக் கிரியைகளில் ஈடுபடுதல்.
- ❖ அடுப்பு மூட்டல்.
- ❖ கொடுக்கல் வாங்கல் செய்தலும் வேலை ஆரம்பித்தலும்.
- ❖ உணவு உண்ணல்.
- ❖ மூத்தோருக்கு வெற்றிலை கொடுத்து வணங்குதல் / வணக்கம் தெரிவித்தல்.
- ❖ தலைக்கு எண்ணெய் வைத்தல்.
- ❖ விசேடமான இனிப்புப் பண்டங்களை பரிமாறுதல்.
- ❖ உறவினர் வீடுகளுக்குச் செல்லல்.
- ❖ விகாரைகளுக்குச் சென்று வழிபடுதல்.
- ❖ பாரம்பரிய விளையாட்டுக்களில் ஈடுபடுதல்.

### புத்ததாண்டு பழக்கவழக்கங்களை பின்பற்றுவதால் தமக்கும் சமூகத்திற்கும் கிடைக்கும் பயன்கள்.

- ❖ ஒற்றுமையாக வாழலாம்.
- ❖ பகிர்ந்து பரிமாரிக் கொள்ளும் பழக்கம் ஏற்படும்.
- ❖ மூத்தோரை மதிக்கும் பழக்கம் உருவாகும்.
- ❖ உரிய வேளையில் வேலை செய்யும் பழக்கம் ஏற்படும்.
- ❖ பொறுமையாக இருக்கப் பழகலாம்.

சித்திரைப் புத்தாண்டு மிக முக்கியமான ஒரு தேசியப் பண்டிகையாகும். இதை சிங்களவர்கள் மாத்திரமன்றி தமிழர்களும் இணைந்து கொண்டாடுகின்றனர்.

## 03) புத்தாண்டு காலம் பற்றிய பாடலைப் பாடுவோம்.

**புத்தாண்டு**

புத்தாண்டு வருகிகிறது
புதுப் பொலிவைத் தருகிறது

மத்தாப்பு சிரிப்பது போல்
மகிழ்ச்சி எங்கும் நிறைகிறது

பருவமழை பொழியட்டும்
பயிர்கள் எல்லாம் தழைட்டும்

நன்முறைகள் பெருகட்டும்
நாடெங்கும் செழிக்கட்டும்

## 04) ஏனைய மதத்தவர்களின் புத்தாண்டு பரம்பரியங்களை அறிந்து கொள்வோம்.

### கிறிஸ்தவர்களின் புதுவருடப் பிறப்பு

- ஜனவரி மாத 1ம் திகதியே கிறிஸ்தவர்களின் புதுவருடப் பிறப்பாகும்.
- அதாவது இது டிசம்பர் 31ம் திகதி நள்ளிரவு 12.00 மணிக்கு ஆரம்பமாகும்.
- இத்தினத்தில் டிசம்பர் 31 நள்ளிரவு ஆராதனையில் பங்குகொள்வர்.
- ஜனவரி முதலாம் திகதி புத்தாடை அணிந்து தேவாலயம் செல்வர்.
- உற்றார், உறவினர், நண்பர்களுக்கு வாழ்த்துக் கூறுவர்.
- பாரம்பரிய உணவுகளை பரிமாறிக் கொள்வர். (கேக் வகை)

### இஸ்லாமியரின் புதுவருடப் பிறப்பு

- இஸ்லாமியர்களின் புதுவருடப் பிறப்பு முஹர்ரம் முதலாம் திகதியை புதுவருடமாகக் கொண்டாடுவர்.
- இத்தினத்தில் பள்ளிவாயல் சென்று தொழுகையில் ஈடுபடுவர்.
- உறவினர்களை வரவேற்பார்கள்.
- கலாசார உணவுகளை அயலவர்களுக்கு பரிமாறுவர்.
- சமய நிகழ்வுகளில் ஈடுபடுவர்.

## 05) புத்தாண்டு காலத்தில் ஏற்படும் விபத்துக்கள்.

- ❖ பட்டாசு வெடிக்கும் போது தீக்காயங்கள் ஏற்படல்.
- ❖ பட்டாசினால் தீ பரவி வீடுகள், கடைகள் என்பன எரிந்து போதல்.
- ❖ பட்டாசு கொளுத்துவதால் மக்களிடையே சச்சரவு ஏற்படல்.
- ❖ மின்விளக்குகளை அலங்கரிக்கும் போது மின்தாக்கல், தீ ஏற்படுத்தல்.
- ❖ ஊஞ்சல் ஆட்டங்களின் போது தவறி விழுதல்.
- ❖ பாரம்பரிய வியைாட்டுக்களின் போது விழுதல், அடிபடல் போன்ற விபத்துக்கள் இடம்பெறல்.
- ❖ நெரிசல் காரணமாக வாகன விபத்துக்கள் ஏற்படுதல்.
- ❖ திண்பண்டங்கள் தயாரிப்பின் போது ஆடைகளில் தீப்பிடித்தல், எண்ணெய் படல் போன்ற விபத்துக்கள் ஏற்படல்.


## புத்ததாண்டு கால விபத்துக்களிலிருந்து எம்மை பாதுகாத்துக் கொள்ளும் வழிகள்

- ❖ அவதானமாகவும் பாதுகாப்பாகவும் பட்டாசுகளை வெடிக்கச் செய்தல்.
- ❖ சிறுபிள்ளைகள் பட்டாசு கொளுத்துவதை தவிர்த்தல்.
- ❖ ஏனையோருக்கு இடையூறு இல்லாத வகையில் பட்டாசுகளை வெடிக்கச் செய்தல்.
- ❖ மின்சாரத்தை பாதுகாப்புடன் பயன்படுத்தல்.
- ❖ பாதுகாப்பற்ற ஊஞ்சல்களில் ஆடுவதைத் தவிர்த்தல்.
- ❖ வாகங்களில் / சைக்கிள்களில் அவதானமாகச் செல்லுதல்.
- ❖ விளையாட்டுக்களின் போது சவனமான முறையில் விளையாடுதல்.
- ❖ திண்பண்டங்கள் தயாரிக்கும் போது தீ, எண்ணெய் என்பன படாதவாறு கவனமாக தயாரித்தல்.

இந்த விபத்துக்களை நாம் நேரடியாக கண்ட போதோ, வானொலி, தொலைக்காட்சி, பத்திரிகை என்பவற்றின் மூலமாக அறிந்து கொள்ளலாம்.

## 06) புத்தாண்டு காலத்தில் விளையாடப்படும் விளையாட்டுக்கள்.

| | |
|---|---|
| பல்லாங்குழி | தாயம் போடுதல் |
| சோகி விளையாட்டு | சடுகுடு |
| ஆடுபுலியாட்டம் | றபான் அடித்தல் |
| தலையணை அடித்தல் | போர்த்தேங்காய் |
| பானம் அருந்துதல் | ஊஞ்சலாட்டம் |
| கயிறு இழுத்தல் | வழுக்கு மரம் ஏறுதல் |
| சைக்கிளோட்டம் | மாட்டுவண்டி ஓட்டம் |



# பயிற்சி

## 01) சரியான விடையின் கீழ் கோடிடுக.

01.சித்திரைப் புத்தாண்டு கொண்டாடப்படும் மாதம்
1. தை மாதம் 2. சித்திரை மாதம் 3. மார்கழி மாதம்

02.புத்தாண்டில் விளையாடப்படும் விளையாட்டுக்களில் ஒன்று
1. உதைபந்து 2. கரப்பந்து 3. பல்லாங்குழி

03.சித்திரைப் புத்தாண்டு காலத்தில் அதிகமாக ஒலி எழுப்பும் பறவை
1. குயில் 2. காகம் 3. கோழி

04.புத்தாண்டு காலத்தில் பூக்கும் பூ எது?
1. வெசாக் பூ 2. முள்முருங்கம்பூ 3. தென்னை

05.புத்தாண்டு காலத்தில் விபத்து ஏற்படக்கூடிய சந்தர்ப்பம்
1. பல்லாங்குழி விளையாடும் போது 2. பட்டாசு வாங்கும் போது
3. பட்டாசு கொளுத்தும் போது

06.புத்தாண்டு காலத்தில் கிடைக்கும் பலவகை அல்லாதது,
1. மா 2. பலா 3. றம்புட்டான்

07.பௌத்தர்கள் பண்டிகைக் காலத்தில் செல்லுமிடம்
1. கோவில் 2. விகாரை 3. பள்ளிவாயல்

08.முஸ்லிம்களின் புதுவருடம் எது?
1. முஹர்ரம் 2. ஜனவரி – 1 3. தைப்பொங்கல்

09.புத்தாண்டு விழாவைக் கொண்டாடுவதால் மக்களிடையே விருத்தியடையும் பண்பு
1. அடக்கம் 2. நேர்மை 3. ஒற்றுமை

10.புத்தாண்டு கால பழக்கவழக்கம் அல்லாதது,
1. புத்தாடை அணிதல் 2. ஓடி ஆடி விளையாடல்
3. கொடுக்கல் வாங்கல் செய்தல்

## 02) சரி (✓) பிழை (✗) கூறுக.

01.புத்தாண்டு நெருங்குவதை குயில் கூவி அறிவிக்கும். ( )

02.றபான் அடித்தல் சிங்களவர்களின் பாரம்பரிய விளையாட்டாகும். ( )

03.புத்தாண்டு காலத்தில் தமிழர் தேவாலயம் செல்வர். ( )

04.கவனமின்றி பட்டாசு கொளுத்துவதால் விபத்து ஏற்படும். ( )

05.புத்தாண்டு காலத்தில் எல்லோரும் கவலையுடன் இருப்பர். ( )

## 03) பொருத்தமான சொல்லை இடைவெளியில் எழுதுங்கள்.

**(முள்முருங்கை, முஹர்ரம், முட்டி உடைத்தல், சித்திரைப் புத்தாண்டு, வியாபாரிகள்)**

01. புத்தாண்டு விளையாட்டுக்களில் .................................. உம் ஒன்றாகும்.
02. புத்தாண்டு காலத்தில் அதிகமான ............................... வருகை தருவர்.
03. புதுவருடத்தில் .................................... பூக்கும்.
04. தமிழ், சிங்கள மக்களால் ............................................ கொண்டாடப்படுகிறது.
05. முஸ்லிம்களின் புதுவருடம் ............................ ஆகும்.

## 04) பொருத்தமாக இணையுங்கள்.

| | |
|---|---|
| 01.குயில் கூவுதல் | விபத்து |
| 02.புத்தாண்டு விளையாட்டு | ஜனவரி - 1 |
| 03.மின்சாரம் தாக்கல் | புத்தாண்டை அறிவித்தல் |
| 04.புத்தாண்டு பழக்கவழக்கம் | ஆடுபுலியாட்டம் |
| 05.கிறிஸ்தவர்களின் புத்தாண்டு | அடுப்பு மூட்டல் |

## 05) சரியான விடை எழுதுங்கள்.

01. புத்தாண்டுக்கு முன் வீடுகளில் இடம்பெறும் வேலைகள் இரண்டு தருக?

……………………………………. ………………………………………

02. புத்தாண்டு காலத்தில் பூக்கும் தாவரங்கள் இரண்டு தருக?

…………………………………….. ……………………………………..

03. புத்தாண்டு காலத்தில் காய்க்கும் தாவரங்கள் இரண்டு?

……………………………………. ………………………………………..

04. புத்தாண்டு கால விளையாட்டுக்கள் இரண்டு தருக?

……………………………………. ………………………………………..

05. புத்தாண்டு காலத்தில் சூழலில் ஏற்படும் மாற்றங்கள் 2 தருக?

……………………………………………………………………………………

……………………………………………………………………………………

06. புத்தாண்டு கால பழக்கவழக்கங்கள் இரண்டு தருக?

……………………………………………………………………………………

……………………………………………………………………………………

07. புத்தாண்டு பழக்கவழக்கங்களை பின்பற்றி நடப்பதால் எமக்கு கிடைக்கும் நன்மைகள் இரண்டு தருக?

……………………………………………………………………………………

……………………………………………………………………………………

08. புத்தாண்டு காலத்தில் இடம்பெறும் விபத்துக்கள் இரண்டு தருக?

……………………………………………………………………………………

……………………………………………………………………………………

09. புத்தாண்டு கால விபத்துக்களை தடுக்கும் முறைகள் இரண்டு தருக?

……………………………………………………………………………………

……………………………………………………………………………………

10. புத்தாண்டு கால உணவு வகைகள் இரண்டு தருக?

……………………………………. ……………………………………..